# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண் 12/2015** **நாள் : 07/07/2015**

**பெறுநர்**

மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்
மாநில செயற்குழு உறுப்பினர்கள்
மாநில பொதுக்குழு உறுப்பினர்கள்

அன்பார்ந்த தோழரே

வணக்கம்

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் ஒரு நாள் அவசர மாநில செயற்குழு கூட்டம் சென்னையில் 05.7.2015 அன்று மாநிலத் தலைவர் தோழர் கே. விஜயன் தலைமையில் நடைபெற்றது.

அக் கூட்டத்தில் மின்ஊழியர் மத்திய அமைப்பின் துணைத்தலைவர் தோழர் ஆர். கருமலையான், மத்திய அமைப்பின் பொதுச்செயலாளர் தோழர் எஸ். எஸ். சுப்பிரமணின், மாநில பொருளாளர் ஈ. அந்தோணி மற்றும் மாநில நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

அக் கூட்டத்தில் 26.05.2015 அன்று சென்னையில் நடைபெற்ற ஒப்பந்த தொழிலாளர்கள் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் 09.06.2015 -ல் மாநில சிஐடியு அறைகூவலின் அடிப்படையில் நடைபெற்ற மறியல் அதில் மின்ஊழியர் மத்திய அமைப்பினுடைய சிறப்பான பங்கு பாத்திரம் ஒப்பந்த தொழிலாளர் ஆர்ப்பாட்டத்தை யொட்டி வாரிய தலைமையுடன் நடைபெற்ற பேச்சு வார்த்தை, அதன் விவரங்கள் ஆகியவைகள் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

மேலும் மின் விநியோகத்தை இரண்டாக பிரிப்பது மானியங்களை வெட்டி மின் கட்டணத்தை உயர்த்துவது, திறந்தவெளி மின் பரிவர்த்தனை கொள்கை மூலம் மின்விநியோகஸ்தர்கள், மின் நுகர்வோர்களை தேர்வு செய்யும் உரிமை அளிப்பது மாநிலத்தில் மின்நிலையம் அமைப்பது, எரிபொருள் பயன்பாடு,மானியங்கள் அளிப்பது, மின்கட்டணம் நிர்ணயிப்பு போன்றவைகளில் மாநில அரசிற்கு இருந்த அதிகாரங்களை பறித்து மத்திய ஒழுங்குமுறை ஆணையம் மூலம் மத்திய அரசு தனது பிடிக்குள் கொண்டுவருவது போன்ற சரத்துக்களை உள்ளடக்கிய சட்டதிருத்தத்தை கொண்டுவர பி.ஜே.பி அரசு துடிக்கின்றது இத் திருத்தங்கள் சட்டமாக்கப்பட்டால் மின்துறை சீரழிவை நோக்கிசெல்லும்.

2014 மின்சார சட்ட திருத்தத்தை கைவிட வேண்டுமென தேசிய மின்சார தொழிலாளர், பொறியாளர் கூட்டமைப்பு சார்பாக பலகட்ட இயக்கங்களை நடத்திய பிறகும் மத்திய அரசு மூர்க்கத்தனமாக சட்டதிருத்தத்தை கொண்டுவர முயற்சிக்கின்றது.

இச் சூழ்நிலையில் 25.06.2015 அன்று டெல்லியில் கூடிய தேசிய மின்சார தொழிலாளர் மற்றும் பொறியாளர் கூட்டமைப்பு மத்திய அரசின் இந்த நடவடிக்கையை கைவிட வேண்டும் என வலியுறுத்தி இச்சட்ட திருத்த மசோதா பாராளுமன்றத்தில் முன்மொழிகின்ற போது இந்திய மின்சார தொழிலாளர்கள் தன்னெழுச்சியான வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்வது என்ற முடிவை அமலாக்குவது சம்மந்தமாகவும் அறிக்கையில் முன்வைக்கப்பட்டது.

மத்தியில் ஆளுகின்ற அரசுகள் கடந்த பல ஆண்டுகளாக கடைபிடிக்கும் தொழிலாளர், மக்கள் விரோத நடவடிக்கைக்கு எதிராக அகில இந்திய ரீதியில் மத்திய தொழிற் சங்கங்களும் தொழில்வாரியான சங்கங்களும் இரண்டு நாள் வேலை நிறுத்தம்உட்பட பல இயக்கங்கள் நடத்தியுள்ளது.

பல இயக்கங்களை தொழிற் சங்கங்களின் தொழில் வாரியான சம்மேளனங்களும் நடத்திய பின்னரும் வைத்த கோரிக்கைகள் மீது பெயரளவுக்கான குழுக்கள் அமைத்தது பேச்சுவார்த்தை நடத்துவது போன்றவைகளில் அரசு ஈடுபட்டுள்ளதே தவிர உயிரோட்டமான பேச்சு வார்த்தை நடத்தி கோரிக்கைகள் மீது தீர்வு காண்பதற்கு பதிலாக தனது தாக்குதலை தொழிலாளர்கள், மக்கள் மீது மூர்க்கத்தனமாக தொடுத்துள்ளது. இந்த நடவடிகைகளை கண்டிக்கின்ற வகையிலும், கோரிக்கைகள் மீது பேச்சு வார்த்தை நடத்தி தீர்வு காண வலியுறுத்தி செப்டம்பர் 2ந்தேதி மத்திய தொழிற் சங்கங்களும், தொழில்வாரியான சங்கங்களும் நாடு தழுவிய வேலை நிறுத்தத்தில் ஈடுபட உள்ளதில் மின்வாரிய ஊழியர்களையும், ஈடுபடுத்துவது சம்மந்தமாகவும் அறிக்கை முன்வைக்கப்பட்டது.

இவை தவிர களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வு, கணக்கீட்டுப் பிரிவு ஊழியர்களின் கோரிக்கைகான இயக்கத்தின் மீது திட்டமிடுவது, 2015 ஆம் ஆண்டு உறுப்பினர் புதுப்பித்தல் ஆகியவை சம்மந்தமாகவும், அறிக்கையில் முன்வைக்கப்பட்டது.

## செயற்குழு உறுப்பினர்களின் விவாதத்திற்கு பின்னர் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது

1. ஒப்பந்த தொழிலாளர்களின் கோரிக்கைகள் மீது தொடர்ச்சியாக பேச்சு வார்த்தை நடத்தி கோரிக்கையில் அபிவிருத்தி காணச்செய்வது,

2, பகுதிநேர ஊழியர்களின் பணிநிரந்தரத்தில் ஏற்பட்டுள்ள பிரச்னைகள், புதிய பதவிகளை அனுமதித்தல், மேலும் பகுதி நேர ஊழியர்களின் புதிய கோரிக்கைகளின் மீதும் பேச்சு வார்த்தையை தொடர்ந்து நடத்தி கோரிக்கையில் தீர்வுகாணச் செய்வது.

3. **2014 மின்சார சட்டதிருத்தத்திற்கு எதிராக...**

   (அ) ஜூலையில் தேசிய மின்வாரிய தொழிலாளர்கள் மற்றும்பொறியாளர்கள் சங்கங்கள் நடத்த உள்ள வேலை நிறுத்தத்தில் தமிழக மின்வாரியத்தில் உள்ள தொழிற் சங்கங்கள் மத்தியில் ஒரு இணைப்பை உருவாக்கி வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்குவது, என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) 6.7.2015 அன்று மின் ஊழியர் மத்திய அமைப்பு, சம்மேளனம், கணக்காயர் களத் தொழிலாளர் சங்கம், தொழிலாளர் முன்னேற்ற சங்கம், ஐ,என்.டி.யூ.சி,. பொறியாளர் சங்கம், பொறியாளர் கழகம், பொறியாளர் அமைப்பு ஆகிய சங்கங்களின் கூட்டுக்குழு கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்தில் ஜூலையில் நடைபெற உள்ள வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்வது என்று ஏகமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

(இ) **வேலை நிறுத்த தயாரிப்பாக 14.7.2015 அன்று தென்மாநிலங்களின் ஊழியர்கள் கலந்து கொள்ளக் கூடிய சிறப்பு கருத்தரங்கை, சென்னை பாரிமுனையில் அமைந்துள்ள இராஜா அண்ணாமலை மன்றத்தில் நடத்துவது.** அச்சிறப்பு கருத்தரங்கில்சென்னை இரு மண்டலங்களும், வேலூர், விழுப்புரம், மண்டலங்களில் அதிகமான ஊழியர்களை திரட்டுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) அதையொட்டி சட்டதிருத்தத்தை கைவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்என்று இணைப்புக்குழு சார்பாக மாநில முதலமைச்சர்,மின்துறை அமைச்சர், மின்வாரிய தலைவர் ஆகியோர்களுக்கு எழுதிய கடிதத்தின் **நகல் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.**

(உ) 6. 7. 2015 அன்று நடைபெற்ற கூட்டுக்குழு தலைவர்கள் கையொப்பமிட்ட சுற்றறிக்கை **நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது**. இதில் சொல்லப்பட்ட விவரங்களை கொண்டு திட்டங்களே துண்டறிக்கை தயார் செய்து பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

(ஊ) இச்சுற்றறிக்கை கண்டவுடன் மாநில ரீதியாக ஒற்றுமை இயக்கத்திற்கு முன்வந்துள்ள தொழிற் சங்கங்களின் கூட்டுக் கூட்டத்தை உடனடியாக திட்டங்களிலும் கூட்டிட வேண்டும்.

(எ) திட்டங்களில் தயாரிக்கப்படும் துண்டறிக்கையோடு இணைப்புக்குழுவின் பிரதிநிதிகள் பங்குபெறும் வாகன பிரச்சாரத்தை நடத்திட வேண்டும்.

(ஏ) இக் கூட்டுக் குழுவில் அதிமுக சங்கத்தையும் அங்கம் பெறுவதற்குண்டான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவைகளின் அடிப்படையில் இந்த வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாகக்கிட அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

4. அதாவது மத்திய அரசின் மக்கள் விரோத, தொழிலாளர் விரோத கோரிக்கைகளுக்கு எதிராக மத்திய தொழிற் சங்கங்களும், தொழில்வாரியான சங்கங்களும் செப்டம்பர் 2ல் நடத்தும் வேலை நிறுத்தத்தில் மின்வாரிய ஊழியர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ள அனைத்து ஏற்பாடுகளையும் செய்திட வேண்டும். மாவட்டங்கள் நடத்தும் பிரச்சார கூட்டங்கள் மத்திய மாநில பொதுத்துறை நிறுவன ஊழியர்கள் நடத்தும் கருத்தரங்குகள் ஆகியவற்றில் மின்வாரிய ஊழியர்கள் திரளாக கலந்து கொண்டு பிரச்சாரத்தில் ஈடுபட்டு வேலை நிறுத்தத்தில் அதிகமான ஊழியர்கள் கலந்து கொள்ள நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறோம்.

இந்த இரண்டு வேலை நிறுத்தங்களையொட்டி மின்ஊழியர் மத்திய அமைப்பு மண்டல கூட்டங்கள், கிளை கோட்ட கூட்டங்கள் நடத்தி விரிவான பிரச்சாரத்தை கொண்டு சென்று வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்குவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

5. களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வை பொறுத்த வரையில் 2 புஜ ஆலோனைகளை பற்றி நின்று வாரியம் இரண்டாவதாக அளித்துள்ள இருவழிப்பாதையில் சொல்லப்பட்ட சில சாதகமான கருத்துக்களையும் உள்ளடக்கி வாரியத்திற்கு பதில் அளித்து பேச்சு வார்த்தை நடத்தி தீர்வு காண வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளது.

6. கணக்கீட்டுப் பிரிவு ஊழியர்களின் கோரிக்கை மீது பேச்சு வார்த்தை நடத்துவது அக்குழு திட்டமிட்டபடி ஆகஸ்ட் 3வது வாரத்தில் அப்பகுதி ஊழியர்களை திரட்டி சென்னை தலைமை அலுவலகம் முன்பு இயக்கத்தை நடத்துவது.

7. உறுப்பினர் புதுப்பித்தலில் சிறு முன்னேற்றம் என்பது ஏற்பட்டுள்ளது. உறுப்பினர் புதுப்பித்தலை 5.9.2015க்குள் முழுமையாக முடிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

தோழர்களே செயற்குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளை முழுமையாக அமல்படுத்துகின்ற அதே நேரத்தில் இரண்டு வேலை நிறுத்தத்தில் மின்ஊழியர்களை முழுமையாக ஈடுபடுத்துவதற்குண்டான நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்

இணைப்பு

1. கூட்டுக்குழு சங்கங்கள் கையொப்பமிட்ட கூட்டுக்குழு சுற்றறிக்கை நகல்.
2. சட்டதிருத்தத்தை கைவிட தமிழக முதலமைச்சர், மின்துறை அமைச்சர்,வாரியத் தலைவருக்கு எழுதிய கடிதம்

# தேசிய மின்தொழிலாளர் மற்றும் பொறியாளர் கூட்டமைப்பு

## தமிழ்நாடு

நாள் : 06/07/2015

அன்புள்ள பொறியாளர்களே, மின்ஊழியர்களே, அலுவலர்களே

வணக்கம்

நவீன தாராளமயக் கொள்கை மின்துறையில் அமலாக்குகின்ற வகையில் மின்சார மசோதா 2003ல் சட்டமாக்கப்பட்டது. மின்சார சட்டம் 2003-ஐ பயன்படுத்தி பெரும்பாலான மாநில மின்வாரியங்கள் கூறுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. தமிழக மின்வாரியம் மூன்று கூறுகளாக பிரிக்கப்பட்டது என்று அறிவிக்கப்பட்டு அதை அமலாக்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழக மின்வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்கள் அனைவருமே கூட மின்உற்பத்தி மற்றும் விநியோக கழகத்தின் ஊழியர்களாக கருதப்பட்டு அக்கழகத்தில் இருந்து பிற கழகங்களுக்கு டெபுடேசன் அளித்துள்ளதாகத் தான் பதிவில் உள்ளது.

கேரள மின்வாரியம் மட்டும் ஒரே அரசுத் துறைக்கழகமாக பிரிக்கப்பட்டு செயலாற்றி வருகிறது.

பிரிக்கப்பட்ட பல மாநிலங்களில் மின்சார உற்பத்தி மற்றும் விநியோகத்தில், பிராங்சைஸ் மூலமும் மாநில மின்துறையை தனியாருக்கு தாரை வார்க்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. மின்சார சட்டம் 2003 அமலாக்கப்பட்டு 12 ஆண்டுகள் கடந்த பின்னர் பரிசீலிக்கின்ற போது மாநில மின்வாரியங்களின் மறுசீரமைப்பு எதிர்பார்த்த பலன்களைத் தரவில்லை என்று சமீபத்தில் உலக வங்கி வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேவைக்கேற்ற மின்சாரம், உற்பத்தி செய்த மின்சாரத்தை முறையாக பகிர்ந்தளிப்பது, மின்துறையில் போட்டியை உருவாக்கி குறைந்த விலையில் மின்சாரத்தை அளிப்பது, மின்துறையில் நிர்வாகச் சீரமைப்பைச் செய்து திறம்பட செயலாக்க வைப்பது, மின்சாரம் சென்றடையாத கிராமப்புறங்களுக்கு மின்சாரத்தை வழங்குவது, மின்இழப்பை குறைப்பது போன்ற அனைத்திலுமே வெற்றிபெற முடியவில்லை என்பது தான் அனுபவம் சொல்லும் பாடமாக உள்ளது.

மத்தியில் ஆளுகின்ற அரசுகள் மின்சாரத் துறையில் மறுசீரமைப்பு செய்வதில் வெற்றிபெற முடியவில்லை என்றாலும் மின் விநியோகம் உட்பட தனியாருக்கு தாரை வார்க்கும் வகையில் 2014 மின்சார சட்டதிருத்தம் கொண்டுவர மூர்க்கத்தனமாக முயற்சிக்கின்றது.

2014 மின்சார சட்டத்திருத்ததின் மூலமாக மின்விநியோகத்தை பகிர்மானம் என்றும், சில்லரை விநியோகஸ்தர்கள் என்றும் இரு கூறுகளாக பிரிப்பது. அதாவது துணை மின் நிலையங்களிலிருந்து மின்நுகர்வோர்கள் வீடுவரை கொண்டு செல்லும் கட்டமைப்பை பகிர்மானக் கட்டமைப்பு அதாவது வாரியத்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதாகவும், வீடுவரை வாரிய கட்டமைப்பைப் பயன்படுத்தி பெற்று வந்த மின்சாரத்தை விநியோகித்து கட்டண வசூலை மின் விநியோகஸ்தர்களிடம் அளிப்பது.

மின்விநியோகத்தை அளித்து வந்த வாரியம் மாற்றி தனியார் விநியோகஸ்தர்கள் மூலம் மின்சாரத்தை விநியோகிப்பது என்பதன் மூலம் மின்விநியோகஸ்தர்கள் மின் நுகர்வோர்களை தேர்வு செய்யும் வாய்ப்பை உருவாக்கி கிராமப்புற மக்களுக்கு மின்சாரத்தை எட்டாக் கனியாக மாற்றுவது, மானியங்களை வெட்டி மின்கட்டணத்தை அபரிமிதமாக உயர்த்துவது, மின்துறையில் மாநில அரசுக்கு உள்ள அதிகாரத்தை குறைத்து மத்திய அரசின் ஆதிக்கத்திற்கு கொண்டு செல்வது ஆகியவைகளை சட்டதிருத்தமாக முன்மொழிந்துள்ளனர்.

2014 மின்சார சட்டதிருத்தம் நிறைவேற்றப்படுமானால் சுதந்திரத்திற்கு பின் கட்டிக்காத்த மின்துறை முழுமையாக சீரழிந்து போகும்நிலை ஏற்பட்டுள்ளது.

மின்துறை சீரழிக்கும் சரத்துக்கள் அடங்கிய திருத்தங்களை நீக்குகின்ற வகையில் மத்திய தொழிற் சங்கங்களோடு பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என பல கட்ட இயக்கங்கள் மூலம் வலியுறுத்திய போதிலும் சட்ட திருத்தத்தினால் பலன் அடையும் பெரு முதலாளிகள், வணிகர்களின் கருத்துக்களைக்கேட்கின்ற மத்திய அரசு தொழிற் சங்கங்களின் கருத்தைக் கேட்பதற்கு இன்றுவரை முன்வராததோடு வருகின்ற நாடாளுமன்ற கூட்டத் தொடரில் (ஜூலை 21-ந் தேதி முதல்) நிறைவேற்றுவதற்குண்டான நடவடிக்கையை எடுத்து வருகிறது.

இந்த பின்னணியில் ஜூன் 25ல் டெல்லியில் கூடிய தேசிய மின்சார தொழிலாளர் மற்றும் பொறியாளர் கூட்டமைப்பு கூட்டத்தில் (தமிழகத்தில் மின்சார தொழிலாளர் சம்மேளனம், தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு (சிஐடியு) தொழிலாளர் முன்னேற்ற சங்கம், ஐ.என்.டி.யு.சி, பொறியாளர் கழகம், பொறியாளர் சங்கம்) மின்துறையை முற்றிலுமாக **சீரழிக்கும் 2014 மின்சார சட்ட திருத்தத்தை பாராளுமன்றத்தில் முன் மொழிகின்ற அன்று நாடு முழுவதுமுள்ள மின்சாரத் தொழிலாளர்கள ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்து பணியை புறக்கணிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.**

தேசிய மின்சார தொழிலாளர் மற்றும் பொறியாளர் கூட்டமைப்பின் அகில இந்திய முடிவை தமிழக மின்சார வாரியத்தில் அமுல்படுத்தும் வகையில் அதன் முக்கியத்துவத்தை மின்வாரிய ஊழியர்கள் மத்தியில் விளக்கும் வகையில் தென்னிந்திய மின்ஊழியர்களின் கருத்தரங்கு 14.07.2015 அன்று சென்னை பாரிமுனை பேருந்து நிலையம் அருகில் உள்ள இராஜா அண்ணாமலை மன்றத்தில் மாலை 3.00 மணிக்கு நடைபெற உள்ளது.

நடைபெறும் கருத்தரங்கில் மின்வாரிய ஊழியர்கள் திரளாக கலந்து கொள்வதோடு 2015 ஆம் ஆண்டு ஜூலையில் நடைபெற உள்ள வேலை நிறுத்தத்திற்கு தேவையான திட்டமிட்ட தயாரிப்புகளை செய்திட கேட்டுக் கொள்கிறோம். தேவையான கீழ்கண்ட தயாரிப்புகளை உடனடியாக அனைத்து வட்ட/திட்ட/கிளைகளும் செய்திட கேட்டுக் கொள்கிறோம்.

1. மாநிலம் முழுவதும் அனைத்து திட்டங்களும் உடனடியாக கீழ்கண்ட நமது அனைத்து சங்கங்களின் இணைப்புக்குழு கூட்டத்தை நடத்தி ஜூலை 14 சென்னை கருத்தரங்கத்திற்கு திட்டங்களிலிருந்து கலந்து கொள்வதை உறுதிசெய்வது. மேலும்சென்னையை சுற்றியுள்ள திட்டங்களில் அதிக எண்ணிக்கையிலும் மாநிலத்தின் பிற பகுதிகளில் பிரதிநிதிபடுத்துகின்ற வகையில் கலந்து கொள்ள வேண்டும்.

2. சங்க தலைமையிலிருந்து வழங்கப்பட உள்ள போஸ்டர்கள் திட்டம் முழுவதும் ஒட்டுவதுடன் இத்துடன் முதலமைச்சருக்கு நாம் அளித்த கடிதத்தையே துண்டறிக்கையாக கூட்டாக தயார் செய்து திட்டம் முழுவதும் பிரச்சாரம் செய்திட வேண்டும்.

3. வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கிட திட்டங்களில் கூட்டாக வேன் பிரச்சாரம் செய்திட வேண்டும்.

மின்சார தொழிலாளர் சம்மேளனம்
பொதுச் செயலாளர்

கணக்காயர் மற்றும் களத் தொழிலாளர் சங்கம்
பொதுச் செயலாளர்

தொழிலாளர் முன்னேற்ற சங்கம்
பொதுச் செயலாளர்

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு
பொதுச் செயலாளர்

ஐ.என்.டி.யு.சி / TNNEWF
பொதுச் செயலாளர்

பொறியாளர் சங்கம்
பொதுச் செயலாளர்

பொறியாளர் கழகம்
பொதுச் செயலாளர்

பொறியாளர் அமைப்பு
பொதுச் செயலாளர்

# தேசிய மின்தொழிலாளர் மற்றும் பொறியாளர் கூட்டமைப்பு

## தமிழ்நாடு

நாள் : 07/07/2015

பெறுநர்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்**
தமிழ்நாடு அரசு,
செயின்ட் ஜார்ஜ் கோட்டை
சென்னை 600 009.

மதிப்பிற்குரிய அய்யா.

பொருள் : **மின்சார சட்ட திருத்த மசோதா - 2014 -ஐ கைவிட கோருதல் தொடர்பாக**

இந்திய மின்துறையில் மின்விநியோகத்தை தனியாருக்கு தாரை வார்க்கும் நோக்கத்தோடு நிறைவேற்றபட உள்ள சட்டதிருத்தத்தை திரும்பப் பெறுக என்ற கோரிக்கையை இந்திய மின் துறையில் பணியாற்றும் லட்சக்கணக்கான ஊழியர்கள், அதிகாரிகள், பொறியாளர்கள் உள்ளிட்ட கூட்டமைப்பு கோரிக்கையாக வைத்ததோடு, அனைவருக்கும் தரமான மின்சாரத்தை தடையின்றி, மின் நுகர்வோர்கள் செலுத்தும் வகையில், (அதிக மின் கட்டண சுமை இல்லாமல்), மின் கட்டணத்தை நிர்ணயித்திடுக என்ற கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

இந்தியாவில் சுதந்திரத்திற்கு பின்னர் இன்றும் முப்பது கோடி மக்களுக்கு மின்சாரம் கனவுப் பொருளாகவே இருப்பதை நாம் அறிவோம். மின்சார மசோதா 2003-ல் சட்டமாக்கப்பட்ட போது மின்துறையில் போட்டியையும், திறமையையும் வளர்த்து 2007 ஆம் ஆண்டில் குறைவான விலையில் மின்சாரத்தை அனைவருக்கும் அளிப்போம் என்று மத்தியில் ஆட்சியில் இருந்தவர்கள் கொடுத்த வாக்குறுதி கொடுத்த நிலையில் மின் பற்றாக்குறையும் மின் கட்டண உயர்வு பல மடங்கு அதிகரித்துள்ளது என்பது தான் கடந்த 10 ஆண்டு அனுபவம்.

இந்திய மின்துறை பொறியாளர்கள், ஊழியர்கள் கூட்டமைப்பு, மின்சார மசோதா 2003-ஐ எதிர்த்து அது சட்டமாக்கப்பட்டால் மின்துறை தனியாருக்கு தாரை வார்க்கப்பட்டு கலிபோர்னியா இருண்டு போனது இங்கும் நடைபெறும் என்று அன்றே சொன்னோம். மின்துறையில் மறு சீரமைப்பு, கடந்த 50 ஆண்டுகளாக மின்துறையில் ஏற்பட்ட நஷ்டம் ரூ. 26000/- கோடி நஷ்டம் ஆனால் இன்றைய நிலையோ மின்சார சட்டம் அமலாக்கப்பட்ட 10 ஆண்டுகளில் மின்துறைக்கு ஏற்பட்ட இழப்பு ரூ. 3 லட்சம் கோடியாகும்.

தனியார் மின் விநியோக கம்பெனிகள் பிராங்க்சைஸ் மூலம் மின் கட்டண உயர்வு பலனை அனுபவித்தார்களே தவிர மாநில, மத்திய பொதுத்துறை நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய கடனை கூட செலுத்தாமலேயே காலத்தை கடத்தி வருகின்றனர். குறுகிய கால வியாபாரம் மூலம் மின் கட்டணத்தை ரூபாய் ஒன்று முதல் ரூபாய் இருபது வரை உயர்த்தி மகிழ்ந்தார்கள்.

மின்சார சட்டம் 2003 அமலாக்கம் மின் நுகர்வோர்களுக்கு பாதகத்தையே உருவாக்கியது. 2014 ஜூன் மாதம் வெளியிட்ட உலக வங்கி அறிக்கையில் மாநில மின் வாரியங்களின் மறு சீரமைப்பு, எதிர்பார்த்த பலனை தரவில்லை என்றும் அவர்களுடைய ஆய்வின் அடிப்படையில் கேரள மின்சார வாரியம் ஒரே கார்ப்பரேட் மின் நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு மிகத் திறமையாக பணியாற்றி வரும் நிறுவனமாக உள்ளது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் மின்உற்பத்தி திறன் ஒரு லட்சம் மெகாவாட்டாக உற்பத்தி செய்தபோதிலும் பல மாநிலங்களில் 8 முதல் 10 சதவீதம் வரை மின்வெட்டு நிலவுகிறது. தனியார் மின் உற்பத்தி நிலையங்களில் உற்பத்தியாகும். 50,000 மெகாவாட் மின்சாரம் பல நேரங்களில் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகின்றது. இங்கு தேவையான மின்தொடரமைப்பு, கட்டமைப்பு இல்லாததாலும் சில குறிப்பிட்டமாநிலங்களில் தேவைக்கு அதிகமாக பல மடங்கு உற்பத்தி குவியலாக செய்யப்படுவதுமே காரணமாகும்.

தேசிய நலனை பின் தள்ளி இயற்கை மின் உற்பத்தி, ஆதாரங்களை தனியாருக்கு தாரை வார்க்கும் நிகழ்ச்சியும் இக்காலத்தில் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அல்ட்ரா மெகா பவர் புராஜக்ட் மூலம் மின்உற்பத்தியை அடைய முடியாவிட்டாலும், ஊழல், மெகாஊழல் நடைபெறுவதற்கு ஆதாரங்களாக உள்ளன. அதாவது அரசுகளே 25 ஆண்டுகளுக்கு மின் பரிவர்த்தனைக்காக நிர்ணயிக்கப்பட்ட விலையை கூடுதலாக மாற்றுவதற்கு அனுமதிக்கின்ற அவல நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் அரசு மின்சார சட்ட திருத்தம் 2014 ஆம் ஆண்டு மசோதாவை முன் மொழிவதன் மூலம் மின்சார விநியோகத்தில் தனியாரை நுழைய அனுமதிப்பதோடு எந்த வித முதலீடும் இல்லாமல் தனியார் மின் விநியோகிப்பாளர்கள் மின்சார கட்டமைப்பை பயன்படுத்தி இலாபம் ஈட்ட வகை செய்யப்பட்டுள்ளது. மின் பகிர்மானத்தை பொருத்த வரையில் பகிர்மானம், விநியோகஸ்தர்கள் என பிரிவுகளாகக் பிரிப்பதன் மூலம் மின் நுகர்வோர்கள் மின் இணைப்பைப் பெற இரு அமைப்புகளை சார்ந்து நிற்க வேண்டிய நிலையை உருவாக்குவதன் மூலம் மின்நுகர்வோர்கள் மின் இணைப்பை பெற காலதாமதத்தை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

முன்மொழிந்துள்ள சட்ட திருத்தத்தில் மின் விநியோக தனியார் நிறுவனங்கள் தங்களது மின் நுகர்வோர்களை தேர்வு செய்ய வாய்ப்பளிக்கப் பட்டுள்ளதால் மின் விநியோகிப்பாளர்கள் அதிக கட்டணத்தில் மின்சாரத்தை வாங்குவதற்கு தயாராக உள்ள மின் நுகர்வோர்களையே தேர்வு செய்யும் நிலை ஏற்பட்டுள்ளதால் கிராமப்புற மக்களுக்கு மின்சாரம் என்பது எட்டாக்கனியாக மாறும் நிலை உருவாகி உள்ளது.

இந்திய மின் பொறியாளர், ஊழியர்கள் கூட்டமைப்பு சாதாரண மக்களின் வருவாயை வர்த்தகர்களுக்கு வாரி வழங்கும் நிலை ஏற்பட்டுள்ளதை கவலையோடு உற்றுநோக்குவதோடு மக்கள் சேவையில் முக்கிய பங்காற்றும் மின்துறை, இலாபம் ஈட்டுவோரின் வேட்டைக்காடாக மாறக்கூடாது என்பதை குறிப்பிட விரும்புகிறது.

அரசு முன் மொழிந்துள்ள 2014 ஆம் ஆண்டு சட்ட திருத்தத்தின் மூலம் மத்திய அரசு பொதுத்துறை நிறுவனங்களின் நற்பெயரை கெடுத்து தனியாருக்கு அனைத்து வகைகளிலும்

சலுகைகளை அளித்து தனியாருக்கு கொள்ளை லாபம் கிடைத்திடும் வகையில் அமைந்துள்ளது. இந்த வகையில் தான் மின்சார சட்டம் 2014 திருத்தம் வடிவம் அமைக்கப்பட்டுள்ளது.

தனியார் மின் நிறுவனங்களுக்கு ஏற்படும் நட்டத்தை அரசு நிறுவனங்கள் பகிர்ந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. 2014 சட்ட திருத்தம் சம்மந்தமாக பாராளுமன்ற நிலைக்குழுவிற்கு பல ஆலோசனைகளை வழங்கியுள்ளது. பெரும்பாலான மாநிலங்கள் மின்சார சட்ட திருத்தத்திற்கு மறுப்பு தெரிவித்து இருந்த போதிலும், பாராளுமன்ற நிலைக்குழு பெரும்பாலான மாநிலங்கள் மின் பகிர்மானத்தை பகிர்மானம், விநியோகம் என இரு பிரிவுகளாக பிரித்துள்ளதை வரவேற்பதாக குறிப்பிட்டுள்ளது. மொத்தத்தில் அரசின் கூட்டமைப்பு தத்துவத்திற்கு வேட்டு வைக்கும் வகையில் சட்டதிருத்தத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முன் மொழியப்பட்டுள்ளது.

பாராளுமன்ற நிலைக்குழுவின் கருத்துக்களில் சிலவாக, பாராளுமன்ற நிலைக்குழு, மின் உற்பத்தியாளர்கள், தொழில் நிறுவனக் கூட்டமைப்புகளான அசோசம், சி.ஐ.ஐ., ஏ.பி.பி., ஐ.பி.பி.எ.ஐ. மற்றும் எப்.சி.சி.ஐ. போன்ற அமைப்புகளோடு விரிவான பேச்சு வார்த்தை நடைபெற்றதாகவும் அவைகள் அனைத்துமே அரசு முன் மொழிந்துள்ள சட்ட திருத்தத்திற்கு சாதகமாக உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய மின்சார தொழிலாளர் மற்றும் பொறியாளர் கூட்டமைப்பு சட்டதிருத்தம் சம்மந்தமாக அமைப்புகளோடு பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்று கோரிக்கைகள் கொடுத்த போதும் இதுவரையில் அப்படிப்பட்ட கருத்து கேட்டு பரிசீலிப்பது என்பது நடைபெறவில்லை என்பது குறிப்பிடுகின்ற அதே நிலையில் இந்த அரசு வர்த்தக சமூகத்தின் கருத்துக்களுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுத்து பரிசீலிக்க உள்ளதை எங்களது அமைப்பு கடுமையான ஆட்சேபணையை பதிவு செய்ய விரும்புகிறது.

இந்த சட்டதிருத்தத்தில் கிரிட் பாதுகாப்பு பற்றி குறிப்பிடுகின்றதே தவிர இத்துறையில் பணியாற்றும் பல லட்சம் ஒப்பந்த தொழிலாளர்கள் மிக மோசமான நிலையில் பணியாற்றுவதோடு அவர்கள் குறைந்த கூலியில் சுரண்டப்படுவது, குறைந்தபட்ச பாதுகாப்பற்ற நிலை ஆகியவைகளோடு மின்சாரம் தடையின்றி வழங்க பணியாற்றும் மின்சார பணியாளர்களின் பணிப்பாதுகாப்பு கேள்வி குறியானது சம்மந்தமாக ஒன்றும் குறிப்பிடவில்லை.

இருபது லட்சத்திற்கும் மேற்பட்ட ஊழியர்களை உறுப்பினர்களாகக் கொண்ட தேசிய மின்சார தொழிலாளர் மற்றும் பொறியாளர் கூட்டமைப்பு இந்த சட்ட திருத்தம் நிறைவேற்றப்பட்டால் ஒரு சில தனியார் முதலாளிகள் மட்டுமே பயன்பெறுவார்கள். இந்திய மக்கள் தொகையில் பெரும்பாலோருக்கு மின்சாரம் எட்டாக்கனியாக மாறுவதோடு மின் கட்டண உயர்வும், தவிர்க்கமுடியாத ஒன்றாகி விடும் என்பதை குறிப்பிட விரும்புகிறது.

2014 மின்சார சட்ட திருத்தம் சாதாரண மக்களின் தேவையை பூர்த்தி செய்வதற்கு பதிலாக மின்சார சட்டம் 2003 சரத்துக்கள் மூலம் மேலும் மோசமான நிலையை உருவாக்க உள்ளது. இச்சூழ்நிலையில் வர்த்தகர்களின் இலாபத்திற்கு உதவி செய்யும் வகையில் முன்மொழிந்துள்ள சட்ட திருத்தத்தை கைவிட ஆவண செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

**மேலும் இந்த மின்சார சட்டதிருத்த மசோதா 2014 மாநில அரசுகளின் உரிமையை பறிக்கின்ற வகையில் உள்ளதை சுட்டிக்காட்டி இதை கைவிட வேண்டும் என தமிழக முதல்வர் பாரத பிரதமருக்கு கடிதம்** (P.R. No. 648, dated 23.02.2014) **எழுதியுள்ளதையும் தங்களது கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம்.**

மத்திய அரசு சட்டத்திருத்த முன் மொழிவை கைவிடுவதற்கு பதிலாக சட்டதிருத்தத்தை பாராளுமன்றத்தில் முன் மொழிந்து சட்டமாக்க முற்படுமேயானால் தேசிய மின்சார தொழிலாளர் மற்றும் பொறியாளர் கூட்டமைப்பின் வழிகாட்டும் அடிப்படையில் கீழ்காணும் சங்கங்கள் தங்களது எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் சட்டத்திருத்தத்தை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யும் அன்று ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்து பணியை புறக்கணிப்பது என்று முடிவு செய்துள்ளோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.


மின்சார தொழிலாளர் சம்மேளனம்
பொதுச் செயலாளர்

கணக்காயர் மற்றும் களத் தொழிலாளர் சங்கம்
பொதுச் செயலாளர்

தொழிலாளர் முன்னேற்ற சங்கம்
பொதுச் செயலாளர்

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு
பொதுச் செயலாளர்

ஐ.என்.டி.யு.சி
பொதுச் செயலாளர்

பொறியாளர் சங்கம்
பொதுச் செயலாளர்

பொறியாளர் கழகம்
பொதுச் செயலாளர்

பொறியாளர் அமைப்பு
பொதுச் செயலாளர்